இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை 2008/2009
மட்டம் - 04
**LWU 2313** – குடும்பச்சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

70

திகதி: 25.03.2009 நேரம்: மு.ப 09.30 – பி..ப 12.30

**ஐந்து வினாக்களுக்கும் மாத்திரம் விடை தருக.**
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்**

1. முஸ்லிம்களுக்கு பிரயோகமுடைய பொதுச்சட்டத்தினை விடுத்து இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை நாடுகின்ற பிரித்துணரக்கூடிய ஓர் போக்கு சுதந்திரத்திற்கு பின்னதான காலப்பகுதியில் காணப்படுகின்றது.

   முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் உருவாக்கத்தில் தொடங்கி, இலங்கைக்கு பிரயோகமுடைய முஸ்லிம் சட்டத்திற்கு, சட்டவாக்கத்தினாலும் மற்றும் நீதித்துறையினாலும் புரியப்பட்டுவந்த அபிவிருத்திகளை விளக்குக.

2. சுப்புன் இனால் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஓர் அறையில் திருமணமாகாத சோடிகளான சுப்புனும் நடேஷாவும் கூடிவாழ்ந்தனர். 2001ம் ஆண்டு அவள் கருவுற்றிருப்பதாகவும் மேலும் அவர்கள் திருமணம் செய்ய வேண்டுமெனவும் சுப்புனுக்கு நடேஷா அறிவித்திருந்தாள். சுப்புன் இதற்கு சம்மதித்தானாயினும் தான் கிறிஸ்தவ மதத்தினைச் சார்ந்தவன் என்றபடியினால் தமது திருமண வைபவம் கத்தோலிக்க தேவாலயத்தில் இடம்பெற வேண்டும் எனத் தெரிவித்தான். சுப்புனின் நண்பன் கொழும்பில் அமைந்துள்ள ஓர் கத்தோலிக்க தேவாலயத்தில் திருமண வைபவத்தினை நடார்த்துவதற்கு ஏற்பாடு செய்தான். திருமண நாள் அன்று அவ்விரு திறத்தவர்களும் சில நாண்பர்களுடன் தேவாலயத்திற்கு சென்றனர். தேவாலயத்தில் இருந்த ஒரேயொரு மதகுருவும் சுகவீனம் காரணமாக அங்கு பிரசன்னமாக இராதபடியினால், நண்பர்களின் முன்னிலையில் இருவரும் சமயப் பிரார்த்தனைகளைக் கூறி மோதிரத்தினை மாற்றிக் கொண்டனர். அதன் பிறகு தம்பதியினர் கணவன் மனைவியாக வாழ்ந்தனர். 2002ம் ஆண்டு நடேஷாவிற்கு பிறந்த குழந்தைக்கு சமில எனப்பெயரிட்டனர்.

   2008ம் ஆண்டு சுப்புன் ஓர் வங்கியில் நிறைவேற்றுப்பதவியில் இணைவதற்காக திருகோணமலைக்குச் சென்றான். அவன் நடேஷா மற்றும் சமிலவைப் பார்ப்பதற்காக ஒரு மாதத்திற்கு இரு முறை கொழும்புக்கு சென்றுவந்தான். அதன் தொடர்ச்சியாக அவனால் மேற்கொள்ளப்பட்ட வருகைகளின் அளவு மெதுவாகக் குறைவடைந்தது. இதனைப்பற்றி நடேஷா விசாரித்த பொழுது சுப்புன் அவள்மீது கோபம் கொண்டதுடன் திருகோணமலைக்கு மீண்டும் சென்றான். நடேஷாவிற்கு பணம் அனுப்புவதனை அவன் நிறுத்தினான். வீட்டுவாடகையைச் செலுத்துவதற்கும் சமிலவினைக் கவனிப்பதற்கும் நடேஷாவின் சம்பளம் போதியதாக இல்லாமையால் அவளுக்கு கிடைக்கப்பெறக்கூடிய வழக்கிடு காரணிகளை அறிவதற்காக உம்மை நாடுகின்றாள்.

   நடேஷாவிற்கு ஆலோசனை வழங்குக.

3. விஷ்வா மற்றும் கமலினி ஆகியோர் 1970ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும் இரு குடும்பங்களின் பிள்ளைகளாவர். கமலினியின் தந்தையினால் கொண்டுவரப்பட்ட ஓர் வரனின் அடிப்படையில் 2000ம் ஆண்டு விஷ்வா மற்றும் கமலினியிற்கு இடையில் திருமணம் பதிவுசெய்யப்பட்டது. திருமணம் இடம்பெற்று

இரண்டு நாட்களின் பின்னர் சீதனமாக காங்கேசன்துறையில் உள்ள 2 ஏக்கர் நிலத்தினை கமலினியின் தந்தை அவளுக்கு கைமாற்றம் செய்தார்.விஷ்வா, 2001ம் ஆண்டு இறந்த தமது பாட்டனாரின் இறுதி விருப்பாவனத்தின் மூலம் யாழ்ப்பாணத்தின் நகர்புரத்தில் காணப்பட்ட மூன்று மாடிக்கட்டிடத்தினை வழியுரிமையாகப் பெற்றான். 2003ம் ஆண்டு கமலினி இரட்டைப் பெண்பிள்ளைகளைப் பெற்றாள். குறித்த கட்டிடத்தினை வாடகைக்கு விட்டதன் மூலம் பெற்ற பணத்தினைக் கொண்டு விஷ்வா சைக்கிள் வண்டி சக்கரங்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலையொன்றினைக் கொள்வனவு செய்தான். 2005ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டடத்தினை விஷ்வா விற்பனை செய்ததுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள மாணிப்பாய் என்னும் இடத்தில் 25 ஏக்கர் காணியினை கொச்சிக்காய் பயிரிடுவதற்கென கொள்வனவு செய்தான், 2009ம் ஆண்டு ஆயுதக்குழுவொன்றினால் விஷ்வா கொல்லப்பட்டான். கமலினி தனக்கும் தனது இரு பெண்பிள்ளைகளுக்கும் உரிய சொத்துறுதியற்ற வழியுரிமையை அறிய விரும்புகின்றாள்.

(அ) கமலினிக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) எல்லா திறத்தவர்களும் கண்டியச் சிங்களவர்களாகவும் சொத்துக்கள் அனைத்தும் கண்டியிலும் அமைந்திருந்தால் உம்முடைய விடை வேறுபடுமா?

4. பிள்ளையினுடைய உண்மையான தந்தையல்லாத நபரின் மீது தந்தைமை சுமத்தப்படாது சரியான தந்தைமை உரிய நபரின்மீது சுமத்தப்பட்டால் மாத்திரமே பிள்ளையின் மிகச் சிறந்த அக்கரை அடையப்படமுடியும்.

நெறிமுறை தொடர்பான ஊகத்தின் வரலாற்றுரீதியான அபிவிருத்தியினை தொடர்புறுத்தி இக்கூற்றினை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

5. 1998ம் ஆண்டு ஜகத் மற்றும் கல்யாணி ஆகியோர் தமது திருமணத்தினை பதிவு செய்தனர். அவர்களுக்கு முறையே 1999ம் ஆண்டு மற்றும் 2001ம் ஆண்டுகளில் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். ஜகத் மற்றும் கல்யாணி ஆகியோருக்கு ஒற்றுமையாக வாழ இயலாதிருந்ததுடன் சிறு விடயங்களுக்கும் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டனர். ஜகத்துடன் வாழ்வதனை கடினமாகக் கருதிய கல்யாணி அவர்களது இரண்டு பிள்ளைகளுடன் தனது பெற்றோரின் வீட்டிற்கு வாழச் சென்றாள். 2008ம் ஆண்டு பிள்ளைகளின் பாதுகாவலை (custody) கோரி ஜகத் நீதிமன்றத்தில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்தான். அவனுக்கு பாதுகாவலும் கல்யாணிக்கு பிள்ளைகளை அணுகுவதற்கான உரிமையும் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. கல்யாணி கொழும்பில் ஓர் வேலையைத் தேடிக்கொண்டாள் என்பதுடன் 2008 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் அவள் வேலைசெய்ய ஆரம்பித்தாள். ஒவ்வொரு மாதத்திலும் பிள்ளைகளைக் காண அவள் சென்றதுடன் அவர்களுடன் தொலைபேசிமூலமான தொடர்புகளைப் பேணவும் தவறவில்லை. ஒருநாள் அவள்தனது பிள்ளைகளைச் சந்தித்த வேளையில் அவளது மூத்த பிள்ளை, ஜகத் சுமனாவெனும் இன்னொரு பெண்ணை வீட்டிற்கு அழைத்து வந்துள்ளதாகவும் அவள் அவர்களை துன்புறுத்துவதாகவும் கல்யாணிக்கு தெரிவித்ததுடன் மேலும் ஜகத் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வருவதாகவும் சுமனாவிடம் சண்டையிடுவதாகவும் கல்யாணிக்கு அறிவுறுத்தியது.

மீளாய்வு விண்ணப்பம் ஒன்றின் மூலம் பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பான பிரச்சனையை மீளவும் எழுப்பலாம் எனக் கருதிக்கொண்டு, இரு பிள்ளைகளினதும் பாதுகாவல் பற்றிய பிரச்சனை தொடர்பில் சட்டக்கருத்தொன்றை வரைக.

6. பெண்கள் பட்டயமானது இலங்கை பெண்களின் உரிமையை ஆதரித்தபோதிலும் சமத்துவத்திற்கான பெண்களின் உரிமை தொடர்ச்சியாக மீறப்பட்ட பரப்பாகப் பெண்களின் ஆதன உரிமை இன்னும் காணப்படுகின்றது.

(அ) கருத்துரைக்க

(ஆ) ஆதன உரிமை பரப்பில் உள்ள பேதங்காட்டலை இல்லாதொழிப்பதற்கு என்ன நிதர்சனமான பிரேரனைகளை நீர் முன்வைப்பீர்?

7. தர்ஷாவின் மாமனின் ஏற்பாட்டில் தர்ஷாவினதும் பிரேமதாசவினதும் திருமணம் இடம்பெற்றது. திருமணத்தின் பின்னர் பிரேமதாச தனது மனைவி ஓர் வெளிநாட்டு தொலைபேசி இலக்கத்திற்கு பல தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டுள்ளதாக அறிந்தான். பிரேமதாச இதனைப்பற்றி தர்ஷாவிடம் விசாரித்த பொழுது, தனக்கு தமது மாமன் மகனுடன் ஓர் காதல் தொடர்பு இருந்ததாகவும் பிரேமதாசவினை தமது விருப்பத்திற்கு மாறாகவே திருமணம் செய்ததாகவும் அவள் தெரிவித்தாள். பிரேமதாச, கடந்தகாலத்தை மறப்பதற்காக தர்ஷாவினை கேட்டுக்கொண்டதுடன் இனிமேல் அவளது முன்னால் காதலனுக்கு தொலைபேசியழைப்புக்கள் விடுப்பதனைத் தொடர்ந்தால் அவளை அவளது பெற்றோரிடம் மீள அனுப்பிவிடுவதாகவும் கூறினான். அதன் பின்னர் தர்ஷா பிரேமதாசவுடன் கதைப்பதை நிறுத்தினாள். அவளின் கணவனுடன் சேர்ந்து இராப்போசனம் எடுப்பதையும் அவள் தவிர்த்தாள். பல சந்தர்ப்பங்களில் இராப்போசனம் தயாரிக்கப்படாமையை பிரேமதாச கண்ணுற்றதுடன் உணவகங்களில் உணவினைக் கொள்வனவு செய்தான். தர்ஷா பிரேமதாசவுடன் அறையைப் பகிர்ந்து கொள்வதனை நிறுத்தியதுடன் கீழ்மாடியில் சென்று வாழ்ந்தான். ஒரு நாள் வீட்டு வேலையாள், தர்ஷா எவரோ ஒருவரிடம் ஒரு மணி நேரத்திற்கு மேலாக கதைத்ததாக பிரேமதாசவுக்கு தெரிவித்தான். அவன் அது தொடர்பில் தர்ஷாவினை விசாரித்தபொழுது பூச்சாடியினால் அவனை அவள் அடித்ததுடன் தனது எல்லா உடமைகளுடனும் வீட்டைவிட்டு வெளியேறினாள். தனது மனைவி இன்னொருவனுடன் காதல் தொடர்பு கொண்டுள்ளமையை எவரிடமும் தெரிவிப்பதற்கு பிரேமதாச விரும்பவில்லை. அவனுக்குக் கிடைக்கக்கூடிய வழக்கிடு காரணி என்ன?

பிரேமதாசவுக்கு ஆலோசனை வழங்குக.

8. இலங்கை பிரசையாக இருந்த ஒஸ்முன்ட் 1985ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவுக்கு குடியேறியதுடன் 1995ம் ஆண்டு அங்கு குடியுரிமை பெற்றான். அதே வருடம் அவன் இலங்கைக் குடியுரிமையை இழந்தான். எனினும் ஒரு வருடத்திற்கு இரண்டு முறை அவன் இலங்கைக்கு விஜயம் செய்ததுடன் 2005ம் ஆண்டு நாத்தாண்டியாவில் வசிக்கும் இரேஷாவினை திருமணம் செய்து மீண்டும் அமெரிக்காவிற்கு சென்றான். இவ்விருவரும் தற்போது அமெரிக்க பிரஜைகளாவர். அவர்களுக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் ஒஸ்முன்ட் உம் இரேஷாவும் ஓர் குழந்தையை இலங்கையில் இருந்து மகவேற்பு செய்வதற்கு தீர்மானித்தனர். குழந்தையை மகவேற்பு செய்வதற்கான நடபடிகள் மற்றும் அப்பிள்ளையின் சட்ட நிலைப்பாடு தொடர்பில் ஒஸ்முன்ட் உம்மிடம் ஆலோசனை கோருகின்றார்.

(அ) அவருக்கு ஆலோசனை வழங்குக.
(ஆ) ஒஸ்முன்ட் மற்றும் இரேஷா அகியோர் இலங்கை முஸ்லிம்களாயின் உமது விடை வேறுபடுமா?

(பதிப்புரிமையுடையது)